[1st November 1962

(இ) இந்தத் திட்டத்தின் நிர்வாகத் தலைமை யாரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Budget provision made in 1961–62 :—

Amount utilised up to 31st March 1962.

	RUPEES IN LAKHS.	RUPEES IN LAKHS.
State Housing Board ..	25·00	19·63
Public Works Department	11·50	10·70

(இ) The Chairman, State Housing Board and the Chief Engineer, Public Works Department (General) are the two housing agencies who are implementing the Rental Housing Scheme for State Government Employees in this State.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, மாவட்டங்களிலே அரசாங்க சிப்பந்திகளுக்கு வீடு கட்டும் திட்டமானது சரியாகச் செயல்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அவ்வாறு சரியாகச் செயல்படாததற்குக் காரணம் ரெவின்யூ போர்டு தலைமை நிர்வாகத்தை வைத்திருப்பதுதான் என்பதால் அந்தப் பொறுப்பைக் கலெக்டர்களிடத்தில் ஒப்படைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற வாதம் சரியல்ல. அந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்று இதுவரை யாரும் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர்தான் இப்போது சொல்லுகிறார்கள். இந்த ஸ்கீம் கலெக்டர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, எந்த இடத்தில் நிலம் வாங்குவது, என்பதுபற்றியெல்லாம் அவர்களுடைய ஆலோசனைப்படி. முடிவெடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் வருஷம் ஒன்றுக்கு 50 வீடுகள் கட்டவேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறோம்.

* 1035 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் சர்க்கார் ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) அதில் மத்திய சர்க்கார் உதவித் தொகை எவ்வளவு ?

(உ) 1962-ல் மாவட்ட வாரியாக எத்தனை வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) to (உ) A statement[a] is laid on the Table of the House.

* 1036 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the various schemes proposed by the State Housing Unit, Madurai ; and

---

[a] Printed as Appendix IV on pages 441–442.

1st November 1962]

(b) the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A statement[a] is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது நடந்து கொண்டேயிருக்கிறது.

* 1037 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Housing Unit at Madurai has proposed to construct a number of flats in Madurai City under the Rental Housing Scheme ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Madurai Housing Unit of the State Housing Board has proposed to execute the following projects under the Rental Housing Scheme in Madurai City.

	Estimated Cost. (RUPEES IN LAKHS.)
1 Construction of 50 rental flats for the State Government's low-paid employees of the Ramanathapuram District at Madurai under the Union Government Rental Housing Scheme	5.00
2 Construction of 50 rental flats for the State Government's low-paid employees of Madurai District at Madurai under the Union Government Rental Housing Scheme	5.00
3 State Housing Scheme for Lower Middle Class (Rental) under State funds	1.00

திரு வை. சங்கரன் : இந்த விடுகள் கட்டுவதற்கான இடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனவா என்ற அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : மதுரையில் அதற்கு வேண்டிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

* *1038* கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கிராம வீட்டு வசதித் திட்டம் ஒன்றை எற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

---

a Printed as Appendix V on page 442.